

31.10.2026 செய்திகள்

உலக மல்யுத்தம் : தங்கம் வென்று வரலாறு படைத்தார் மனீஷா

- கஜகஸ்தானில் நடைபெறும் உலக மல்யுத்த சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் மனீஷா பவன்வாலா சாம்பியன் பட்டம் வென்றார்.
- போட்டியின் வரலாற்றில் தங்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனையாக அவர் வரலாறு படைத்தார்.
- உலக சாம்பியன்ஷிப்பில் பட்டம் வென்ற 2-ஆவது இந்தியர் என்ற பெருமையைப் பெற்றார். இதற்கு முன், 2010-இல் சுஷில் குமார் (66 கிலோ) தங்கம் வென்றிருந்தது நினைவுகூரத்தக்கது.
- நடப்பு போட்டியில் மனீஷாவுடன் சேர்த்து, 3 இந்திய வீராங்கனைகள் பதக்கம் வென்றுள்ளார். அவர் தவிர, நீலம் சிரோஹி (50 கிலோ), காஜல் தோசக் (76 கிலோ) வெள்ளியை வசப்படுத்தினர்.

தலைமை தகவல் ஆணையராக முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி நியமனம்

- மாநில தகவல் ஆணையத்தின் புதிய தலைமை தகவல் ஆணையராக ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி எஸ்.நடராஜன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- மாநில தகவல் ஆணையர்களாக எஸ்.மகாலட்சுமி, டி.கே.ஷபீர், சி.பி.மீனா, பத்திரி கையாளர் பி.மகாலிங்கம், ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- தமிழக அரசின் பரிந்துரையை ஏற்று இந்த நியமனங்களை ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர் மேற்கொண்டுள்ளார்.
- இவர்கள் இந்த பதவியில் 3 ஆண்டுகள் அல்லது 65 வயது நிறைவடையும்வரை, இதில் எது முதலில் வருகிறதோ அதுவரை இருப்பார்கள்.
- இவர்களுக்கான ஊதியம், படிகள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் விதிகளுக்குட்பட்டு வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. ஆளுநர் பதவி பிரமாணம் செய்து வைக்கவுள்ளார்.

இந்தியாவில் 12 ஆண்டுகளில் 50 கோடி மக்கள் வறுமையில் இருந்து மீண்டுள்ளனர்

- இந்தியாவில் கடந்த 12 ஆண்டுகளில் சுமார் 49.6 கோடி பேர் வறுமையிலிருந்து மீண்டுள்ளதன் மூலம், உலகிலேயே மிக வேகமாக வறுமையைக் குறைத்த நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது என உலக வங்கி பாராட்டு தெரிவித்துள்ளது.
- உலக வங்கி அக்.2026-க்கான இந்திய வறுமை மற்றும் சமத்துவ அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :
- தீவிர வறுமை மற்றும் பல்வேறு அடிப்படை வசதிகள் தொடர்பான வறுமையைக் குறைப்பதில் இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது.

- குறிப்பாக, இந்தியாவில் 2011 முதல் 2023-ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் சுமார் 49.6 கோடி பேர் வறுமை யிலிருந்து மீண்டுள்ளனர்.
- இதன் மூலம், உலகிலேயே மிக வேகமாக வறுமையைக் குறைந்த நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது. இருப்பினும், நாட்டில் வருமான ஏற்றத்தாழ்வு தொடர்ந்து அதிகமாக உள்ளது.
- இந்தியாவில் அதிக வருமானம் ஈட்டும் முதல் 10 சதவீத தொழிலாளர்களின் சராசரி வருமானம், கடைசி 10 சதவீதத்தில் உள்ள தொழிலாளர்களின் வருமானத்தைவிட கிட்டத்தட்ட 13 மடங்கு அதிகமாக உள்ளது.
- மேலும், பணவீக்கத்தைக் கணக்கில் கொண்ட உண்மையான ஊதியத்தில் தேக்கநிலை, வேலைவாய்ப்புகளின் தரம் குறைவாக இருப்பது, பொருளாதார வாய்ப்புகள் அனைவருக்கும் சமமாகக் கிடைக்காதது போன்ற சவால்களும் தொடர்ந்து நீடிக்கிறது.
- 2021-ம் ஆண்டின் வாங்கும் திறன் சமநிலை அடிப்படையில், ஒரு நாளைக்கு ரூ.399-க்கும் குறைவான வருமானத்தில் வாழும் மக்களின் விகிதம், இந்தியாவில் 2011-ல் 57.7 சதவீதமாக இருந்தது. இது 2023-ல் 16.1 சதவீதமாகக் கடுமை யாகக் குறைந்துள்ளது.

» கிராமப்புறங்களில் அதிக வறுமை

- நாடு முழுவதும் வறுமை குறைந்திருந்தாலும், அதன் தாக்கம் அனைத்து பகுதிகளிலும் ஒரே மாதிரியாக இல்லை.
- ஒரு நாளைக்கு ரூ.399 வருமானம் என்ற அளவுகோலின்படி, 2023-ல் கிராமப்புறங்களில் வறுமை விகிதம் 19.3 சதவீதம ாக இருந்தது.
- நகர்ப்புறங்களில் இது 8.6 சதவீதமாக மட்டுமே இருந்தது.
- இந்தியாவில் 2017 முதல் 2023-ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் சுமார் 13.4 கோடி பேர் கூடுதலாக வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர்.
- இது வேலை செய்யும் வயதுடைய மக்கள் தொகையின் அதிகரிப்பைவிட கிட்டத்தட்ட இரு மடங்கு அதிகமாகும்.

முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

- தமிழகத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட பயனாளிகளின் குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ.1.20 லட்சத்தில் இருந்து ரூ.2.50 லட்சமாக உயர்த்தப்பட்டது.
- இக்காப்பீட்டுத் திட்டம், பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா, ஆயுஷ்மான் பாரத் திட்டத்துடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுகிறது.
- இதற்கான பயனாளி குடும்பத்துக்கு ஆண்டுக்கு ரூ.5 லட்சம் காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.
- இதில், ரூ.2 லட்சம் முதல்வர் காப்பீட்டுத்தொகை, ரூ.3 லட்சம் ஆயுஷ்மான் பாரத் காப்பீட்டுத் தொகையாகும்.
- முதல்வர் காப்பீட்டுத் திட்டம் 2,100-க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- 1.48 கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்கள் காப்பீட்டுத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. அந்த குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.5 லட்சம் வரையிலான சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.
- சில உயர் சிகிச்சைகளுக்கு ரூ.22 லட்சம் வரை வழங்கப்படுகிறது.
- இந்நிலையில் சில மாதங்களுக்கு முன்பு நடந்த சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் காப்பீட்டுத் தொகை ரூ.5 லட்சத்தில் இருந்து ரூ.25 லட்சமாக உயர்த்தப்படும் என முதல்வர் விஜய் அறிவித்தார்.
- இந்நிலையில், இதற்கான காப்பீட்டுத் திட்ட பயனாளி குடும்ப ஆண்டு வருமான வரம்பாக ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருந்த ரூ.1.20 லட்சம் தற்போது ரூ.2.50 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.